காන්තාව සහ මාධ්‍ය සාමූහිකය
பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பு
Women and Media Collective
Established 1984

**பாக்யா அபேரத்னவைச் சூழ நிகழும் சொல்லாடல் மீதான அறிக்கை**
**பங்குனி 2021**

பாக்யா அபேரத்னவை சூழ நிகழும் சொல்லாடலைச் சுற்றியுள்ள பல காரணிகளும் மற்றும் தேசியமட்டத்திலான தொலைக்காட்சியில் சுற்றுச் சூழல் அழிப்பு பற்றிய அவரது அறிக்கையும் கரிசனைக்குரிய விடயமாக உள்ளது.

நாங்கள், பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பாக, சமூக நீதி மற்றும் ஊடக நெறிமுறைகளுக்காக வாதிடுவதில் ஈடுபட்டுள்ள ஒரு அமைப்பாக, மக்கள், அரசு மற்றும் ஊடகங்கள் அவருக்குப் பதிலளிக்கத் தேர்ந்தெடுத்த விதத்தில் பிரச்சினைக்குரியவை பற்றி பின்வருவனவற்றை முன்னிலைப்படுத்த விரும்புகின்றோம்.

குறித்த விடயம் தொடர்பான அமைச்சர், பாக்யாவினது அறிக்கையை உடனடியாகத் தள்ளுபடி செய்தார். ஒரு அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னர் பாக்யா தகவல்களைச் சரிபார்க்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். மேலும், சிங்கராஜா காடுகளின் அழிவு குறித்து பாக்யா எழுப்பிய கவலைக்குரிய சிக்கல்கள் பற்றி பதில் எதையும் அவர் குறிப்பிடவும் இல்லை. பாக்யா உண்மைகளை மேற்கோள் காட்டவில்லை என்ற அவரது கூற்று பாக்யாவின் சொந்த, உண்மையான அனுபவத்தைத் தள்ளுபடி செய்கின்றதுடன், அதனை அற்பமாகவும் காட்டுகிறது. பாக்யாவின் அறிக்கையை உறுதிப்படுத்த வனவிலங்கு அதிகாரிகள் அவரது வீட்டிற்குச் சென்றிருந்தனர். அது மட்டுமன்றி பாக்யாவின் அறிக்கையைப் பதிவு செய்வதற்காக இரண்டு ஆண் பொலிஸ் அதிகாரிகள் அவரது வீட்டிற்குச் சென்றதாக அறிவிக்கப்பட்டது. பாக்யா தொடர்ந்து அரச பொறிமுறைகளினால் துன்புறுத்தப்பட்டதுடன், மீண்டும் மீண்டும் தனது கூற்றை நியாயப்படுத்த வேண்டிய நிலை ஏற்படுத்தப்பட்டது.

இதற்குச் சமமாக மேலும் நெருடும் வகையில் அமைச்சர், பாக்யாவை ஒரு “இளம் பெண்” என்று அழைத்துடன் இந்த அறிக்கை பகுத்தறிவற்றதாகக் கருதப்படுவதற்குரிய காரணமாக அவரது இளமைப் பருவத்தையும் குறிப்பிட்டிருந்தார். இது இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களது, புத்திக்கூர்மை, அபிலாஷைகள் மற்றும் பொதுநலனுக்காக

56/1, සරසවි මාවත, කාසල් වීදිය, කොළඹ 8, ශ්‍රී ලංකාව
சரசவி லேன், காசல் வீதி, கொழும்பு 8, இலங்கை.
Sarasavi Lane, Castle Street, Colombo 8, Sri Lanka

Telephone: +94-11-2690192, 5632045, 5635900, 5635800, 2690201, Fax: +94-11-2690192, 2690201, Email: wmcsrilanka@gmail.com
www.womenandmedia.org facebook.com/womenandmediacollective twitter.com/womenandmedia

Registration No. GA 2476

செயற்படும் ஊக்கத்தை அங்கீகரிக்கவும், மதிப்பு வழங்கவும் முடியாத அரசின் புறமிருக்கும் தோல்வியை அம்பலப்படுத்துகிறது.

இப்படியான ஆதரவளிக்கும், இழிவான அணுகுமுறை, ஊடகங்களின் சில பிரிவுகளால் மீளவும் தூண்டப்பட்டு நிலைநாட்டப்பட்டது. ஒரு செய்தித்தாள் இந்தச் சம்பவத்தைச் “சிறிய பாக்யா” என்ற தலைப்புடன் அறிக்கையிட்டிருந்ததுடன், அவர் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகளில் அக்கறை கொண்ட முதிர்ச்சியின் எந்தவொரு அம்சத்தையும் வெளிப்படுத்தக் கூடியவர் அல்லது வயது வந்தவராக நடந்து கொள்ளும் செயலாளுமையுடையவர் என்பதனையும் உடனடியாக மறுத்திருந்தது. பாக்யா மற்றும் அவரது குடும்பத்தினரின் வீட்டில் ஊடகங்களால் பதிவு செய்யப்பட்டவற்றையும் நாங்கள் கேள்விக்கு உள்ளாக்குகின்றோம். பாக்யாவின் உணர்ச்சிவயப்பட்ட நிலையைப் பதிவு செய்த கேமராவின் பரபரப்பான கோணங்களும் மற்றும் அவரது தாயின் உணர்ச்சி வெளிப்படுத்தல்களைப் பெரிதாக்கிக் காட்டியமையும் ஊடகங்கள் பாக்யா எழுப்பிய உண்மையான பிரச்சனையை விடவும், பரபரப்பான நாடகத்தன்மையிலேயே அதிகம் அக்கறை கொண்டிருந்தன என்பதற்கு சான்றாக அமைந்திருந்தது.

126 வருடப் பழமை வாய்ந்ததான, வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தினால் கடந்த வாரம் விஹார மஹா தேவிப் பூங்காவில் அமைக்கப்பட்டிருந்த சுற்றுச் சூழல் சுவரோவியம் ஜனாதிபதியின் உத்தரவின் பெயரில் அதிகாரிகளால் அகற்றப்பட்டது. ( டெய்லிமிரர் 19.03.2021) இந்தத் தீர்மானத்திற்கு ஜனாதிபதியின் நியாயம் என்னவென்றால், சுவரோவியம் பூங்காவின் அழகை அழித்துவிட்டது என்பதுடன் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கு அது ஒரு சிறந்த வழியாக இருக்கவில்லை என்பதுமாகும். மறுபடியும் கருத்துச் சுதந்திரமும் அமைதியான போராட்டத்திற்கான உரிமையும் அரசால் கட்டுப்படுத்தப்பட்டன.

எனவே நாட்டில் நிகழும் சுற்றுச் சூழல் சீர்கேட்டுப் பிரச்சினை தொடர்பாக, குறிப்பாக கபளீகரம் செய்யப்படும் சிங்கராஜா விடயத்தில் கவனஞ்செலுத்துமாறும், மேலும் கலந்துரையாடல், விவாதத்தைத் தடுக்க மிரட்டலைப் பயன்படுத்தாது இருக்கவும், அல்லது கருத்துச் சதந்திரத்திற்கான ஒரு நபரின் உரிமையைத் தடுக்காதிருக்கவும் வேண்டுமென நாங்கள் அரசுக்கு அழைப்பு விடுக்கின்றோம். மேலும், ஊடகங்கள் குறிப்பாக நெறிமுறையான வகையில் அறிக்கையிடல், சுற்றுச் சூழலில் அதிக ஈடுபாடு கொண்ட அறிக்கையிடல் போன்றவற்றில் பிரக்ஞையுடன் செயற்பட வேண்டும் எனவும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்.